**<u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>**

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்து பிரிவு
துறைத் தலைமைகள்,
அனைத்து வார்டுகள் குழு
உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர்
வடக்கு, தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**திருவள்ளுவர் ஆண்டு 2054 / சுபகிருது / பங்குனி 13**

**ந.க.எண் : 1301/ 2023 / எம்சி. 8 நாள் 27.3.2023**

**<u>அய்யா /அம்மா,</u>**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – 2023-2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் - 29.03.2023 அன்று நடைபெற இருந்த மாமன்ற சிறப்புக் கூட்டம் - தவிர்க்க இயலாத நிர்வாக காரணங்களினால் 31.03.2023 காலை 10.00 மணிக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 29.03.2023 அன்று காலை 10.00 மணிக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் நடைபெற இருந்த 2023-2024ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்கும் மாமன்ற சிறப்புக் கூட்டம் **தவிர்க்க இயலாத நிர்வாக காரணங்களினால் மாற்றியமைக்கப்பட்டு 31.03.2023 வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு** நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/உத்திரவின்படி அனுப்பப்படுகிறது /**

**மாமன்றச் செயலாளர்**

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

அ) **திருக்குறள்**

பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு
இறையொருங்கு நேர்வது நாடு.

(733)

## விளக்கம்

வறட்சி, வெள்ளம், போர்கள் போன்ற சுமைகளைத் தாங்கும் வலிமை பெற்று விளைவின்பத்தைக் காக்கும் தலைவனின் பொறுப்புக்களுக்கு உழைப்பு பொருள் வரிகள் மூலம் உதவும் நேர்த்தியான மக்களே நாடு.

**- திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**பொருள் எண் 1**

| | |
|---|---|
| பொருள் - | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி 2022-2023-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீடு - மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடர்பாக |

------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொது நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதிகளின் 2022-2023-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மானம் எண் 92 நாள் 23.03.2023 இன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, 2022-2023-ஆம் ஆண்டு திருத்திய திட்ட மதிப்பீட்டிற்கும், 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மாமன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–அனுமதிக்கலாம். ந.க.எண்.5676/2022/பி2

---

(ஒப்பம்) மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி